


ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரியின் 4வது பட்டமளிப்பு விழா நடந்தது. இதில், சென்னை டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் மனிதவள மேம்பாட்டுத்துறை துணை தலைவர் மு.கணேசன் கலந்து கொண்டு, மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கி பேசினார். அருகில், கல்லூரி முதன்மை நிர்வாக அலுவலர் சாய்பிரகாஷ் லியோ முத்து, முதல்வர்கள் பழனிகுமார், ஜெயக்குமார்.

# ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி பட்டமளிப்பு விழா

தாம்பரம், ஏப்.18: தாம்பரம் அருகே உள்ள ஸ்ரீசாய்ராம் தொழில்நுட்ப பொறியியல் கல்லூரியில் 4வது பட்டமளிப்பு விழா, கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது. கல்லூரி முதல்வர் பழனிகுமார் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக சென்னை டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் மனிதவள மேம்பாட்டுத்துறை துணை தலைவர் மு.கணேசன் கலந்து கொண்டு, 320 மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார். அப்போது, அவர் பேசியதாவது:

மாணவர்கள் சமூக ஆர்வலர்களாக இருக்க வேண்டும். வளர்ச்சியினை நோக்கி செல்ல வேண்டும். பொது அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். அதிக புத்தகங்களை படிக்க வேண்டும். அப்போது தான் சிறந்து விளங்க முடியும். என பேசினார்.

சாய்ராம் கல்வி குழும நிர்வாகி சாய்பிரகாஷ் லியோ முத்து பேசுகையில், 'பல்கலைக்கழக தர வரிசை பட்டியலில் இக்கல்லூரியை சேர்ந்த 82 மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர். ஒரு தங்க பதக்கத்தையும் இக்கல்லூரி பெற்றுள்ளது. டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் மற்றும் சாய்ராம் தொழில்நுட்ப கல்லூரிக்கும் 10 ஆண்டுகளுக்கு மேலான நல்லுறவு உள்ளது. இதனால், அந்நிறுவனம் அதிகமான வேலை வாய்ப்புகளை இக்கல்லூரி மாணவர்களுக்கு தந்துள்ளது.

நடப்பு கல்வியாண்டில் இக்கல்லூரியை சேர்ந்த 31 மாணவர்கள் பல்கலைக்கழக ரேங்க் பெற்றுள்ளனர்,' என்றார்.

சாய்ராம் தொழில்நுட்ப மேலாண்மை இயக்குனர் மு.மாறன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.